MEDIA MONITORS
ASIA MEDIA MONITORS Sdn Bhd



**Tamil Nesan**
**16/07/2009**
**Page: 7**
**By: T.Subramaniam**
**Section: General News**
**Region: Malaysia Circulation: 45000**
**Type: Malaysia - Tamil Newspapers**
**Size: 459.00 sq.cms**
**Frequency: MTWTFS**



# பையர் ஃபிளை நிறுவனம் ஈப்போ-சிங்கப்பூர் விமானச் சேவையை தொடங்கியது!

(தி.சுப்பிரமணியம்)
ஈப்போ, ஜூலை 16-

பல ஆண்டுகாலமாக வெறிச்சோடி கிடந்த ஈப்போ சுல்தான் அஸ்லான் ஷா விமான நிலையத்தில் ஈப்போ-சிங்கப்பூர் விமானச் சேவை தொடங்கப்பட்டதால் இன்று அந்த விமான நிலையம் களைகட்டியது.

வாரம் நான்கு நாட்களில் ஈப்போவில் இருந்து தொடங்கப்படும் இந்த விமான சேவையில் தொடக்கப் பயணம் இம்மாதம் 12-7-2009 இல் தொடங்கப் பட்டது. இந்த பயணத்தில் பத்திரிகை யாளர்களும் இடம் பெற்றிருந்தனர்.

இந்த பயணத்திற்கு மாநில ஆட்சிக் குழு உறுப்பினர்களான டத்தோ மான் ஹூான் சங், முகமது சஹிர் மற்றும் மாநில மந்திரி புசாரின் ஆலோசகர் டத்தோ சு.வீரசிங்கம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

மாநில மந்திரிபுசாரின் சார்பில் டத்தோஸ்ரீ டாக்டர் ஜம்ரியின் சார்பில் கலந்து கொண்ட ஆட்சிக் குழு உறுப்பினர் டத்தோ ஹாமிடா ஒஸ்மான் அனைவரையும் வழியனுப்பி வைத்தார்.

முன்னதாக சிங்கப்பூரில் இருந்து பையர் ஃபிளை விமானம் மாலை 5 மணிக்கு இங்கு வந்து சேர்ந்தது. அதில் 57 பேர் வந்திறங்கினர். அதே விமானத்தில் பயணமான முதல் குழுவில் 71 பேர் இடம் பெற்றிருந்தனர்.

வாரம் நான்கு நாட்கள் (திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு) ஈப்போவில் இருந்து இந்த பயணம் மேற்கொள்ளப் படுகிறது.

சிங்கப்பூரில் இருந்து வந்து சேர்ந்த முதல் விமானத்தில் இருந்து இங்கு வந்து சேர்ந்த பயணிகளுக்கு சிறபான வரவேற்பு நல்கப்பட்டது.

பையர் ஃபிளை நிறுவனம் கோலாலம்பூர் உட்பட பல இடங்களில் தனது பயணச் சேவையை தொடங்கி னாலும் ஈப்போவில் முதல் சேவையை அது தொடங்கியுள்ளது. பேரா வாழ் மக்களுக்கு இது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாண்டு நவம்பர் மாதம் வரை 85 டிக்கெட்டுகள் விற்று முடிந்து விட்டன என்று டத்தோ ஹாமிடா ஒஸ்மான் தெரிவித்துள்ளார்.

இதன் இரு வழி இரு தரப்பு வாணிப உறவுகள் வலுப்பெறவும், அத்துடன் இங்குள்ளவர்கள் அங்கு பணிபுரிந்து வருவதால் அடிக்கடி இங்கு வந்து செல்ல சுலபமாக இருக்கவும் அது வழி வகுக்கிறது.

இந்த விமானச் சேவை விடுமுறை காலங்களில் இரு நாடுகளுடனான சுற்றுப் பயணத் துறையை மேம்படுத்தவும் வழி வகுக்கிறது என்றார்.




ஈப்போ விமான நிலையத்தை வந்தடைந்த பையர் ஃபிளை விமானம்.



சிங்கப்பூரில் இருந்து இங்கு வந்து சேர்ந்த முதல் பயணிகளை வரவேற்கும் டத்தோ வீரசிங்கம், டத்தோ மான் ஹூான் சுன்.

MEDIA MONITORS
ASIA MEDIA MONITORS Sdn Bhd



**Tamil Nesan**
**16/07/2009**
**Page: 7**
**By: T.Subramaniam**
**Section: General News**
**Region: Malaysia Circulation: 45000**
**Type: Malaysia - Tamil Newspapers**
**Size: 459.00 sq.cms**
**Frequency: MTWTFS**





ஈப்போவிற்கு வருகை புரியும் பயணிகள்.